# சமூக நீதிக்கான முன்னணி

எண்: 15, மேற்கு எல்லைச்சாலை, திருவேங்கடநகர், அம்பத்தூர், சென்னை - 3

தொலைபேசி: 044 26581252 அலைபேசி : + 91 94444 65242

தேதி: 23.07.2018

பெறுநர்:

**உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**
**திண்டுக்கல்**

**ஐயா,**

**வணக்கம். சமூக நீதிக்கான முன்னணியின் வாழ்த்துக்கள்!!!**

*எங்களது அமைப்பு தமிழகத்தில் உள்ள அனைவரும் சாதி, தாழ்த்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டோர் பிரிவு மக்களின் சமூக - பொருளாதார உயர்வுக்கு உழைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை கொண்டு இந்த வகையில் ஜனநாயக நாடான இந்திய அரசியலமைப்பு சட்டம் மற்றும் அந்த நோக்கத்தினை நிறைவேற்ற இயற்றப்பட்ட இந்த சட்டங்களின் பலன் பெறமுடியாத மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பணியாற்றி வருகிறோம்.*

தங்களின் கவனத்துக்கு கீழ்வரும் விஷயத்தை கொண்டு வந்து, அதில் தாங்கள் நேரடியாக தலையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டுகிறோம்.

சம்பவம் யாதெனில், கடந்த 02.07.2018 - காலை 8.25 மணியளவில், கானிப்பாளையத்தில் இயங்கிவரும் பப்பீஸ் மில் வேன் ஒன்று வாகரை - தாராபுரம் வழியில் மகுக்சாமி தோட்டம் என்ற இடத்தில் விபத்துக்குள்ளானதில், அந்த வேனில் பயணம் செய்த பெண் தொழிலாளர்கள் பார்வதி க/பெ குமரன் மற்றும் பாப்பாத்தி க/பெ மாரிமுத்து என்ற இரண்டு பெண் தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். அத்துடன் 20 க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று காப்பாற்றப்பட்டுள்ளனர்.

விபத்தில் இறந்து போனவர்களும், படுகாயமடைந்தவர்களும் பப்பீஸ் கம்பெனியில் பணிபுரிபவர்கள். அன்றைய தினம் பப்பீஸ் கம்பெனிக்கு வேலைக்கு சென்ற போது தான் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் இறந்த 2 பெண் தொழிலாளர்களும், காயமடைந்துள்ள நபர்களும் நமது திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுக்காவை சேர்ந்தவர்கள்.

இறந்தவர்களின் குடும்ப நலன் கருதி, அப்போதைய ஈமச்சடங்குகள் செய்ய பப்பீஸ் கம்பெனி நிர்வாகம் ரூ.ஒரு இலட்சம் பண உதவி செய்துள்ளது.

# சமூக நீதிக்கான முன்னணி

எண்: 15, மேற்கு எல்லைச்சாலை, திருவேங்கட நகர், அம்பத்தூர், சென்னை - 3

தொலைபேசி: 044 26581252 அலைபேசி : + 91 94444 65242

காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்ததுடன், மேற்கொண்டு சிகிச்சைக்கான செலவுகளை அவரவர்களே பார்த்துக்கொள்ள வேண்டும் எனக் கூறி விட்டது. மேற்கொண்டு சிகிச்சையும் இ.எஸ்.ஐ வழியாக பார்த்துக்கொள்ளுங்கள் எனக் கூறி விட்டது.

பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள். இவர்களது வருமானத்தை மட்டுமே நம்பித்தான் இவர்களின் குடும்பங்கள் இருக்கின்றன. விபத்தில் இவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் ஆற இன்னும் இரண்டு, மூன்று மாத காலங்களுக்கு மேல் ஆகும். இந்த நிலைமையை கருத்தில் கொண்டு தாங்கள் இந்த காயமடைந்தவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிதி உதவியிலிருந்து ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூ ஒரு இலட்சம் வரை நிவாரண நிதி வழங்க உதவி செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு The Scheduled Castes and the Scheduled Tribes (Prevention of Atrocities) சட்டம் 1989 விதிகள் 1995 ன் படியும் நிதி உதவி வழங்க தாங்கள் உதவ வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் தொழிலாளர்துறைக்கு தாங்கள் பரிந்துரைத்து Workmen Compensation Act 1923 ன் படியும் உதவி செய்திட வேண்டும் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் விபத்தில் உயிரிழந்த இரண்டு பெண்களின் குடும்பங்களுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியில் உதவி செய்வதற்கு தாங்கள் பரிந்துரைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த விபத்து ஏற்பட காரணமான பப்ளிஸ் கம்பெனி நிர்வாகம் பயன்படுத்தி வந்த வேன் டிஎன் 25 கே 0266 FC செய்யப்பட்டுள்ளதா என்பதையும், அந்த வேனை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு டிரைவிங் லைசென்ஸ் உள்ளதா என்பதையும், அவர் அனுபவம் வாய்ந்த ஓட்டுநரா என்பதையும் RTO மூலம் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

எங்களின் இந்த கோரிக்கைகளை பரிசீலித்து தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

23/3/18

வழக்கறிஞர்.சுப.தென்பாண்டியன் எம்.ஏ.பி.எல்

மாநில அமைப்பு செயலாளர்

சமூக நீதிக்கான முன்னணி